# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1787 - 2012 නොවැම්බර් මස 30 වැනි සිකුරාදා - 2012.11.30

*1787 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV(அ) – மாகாண சபைகள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 1876 | நானாவித அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | | - |
| பதவிகள் - வெற்றிடம் | - | | - |


**கவனிக்க.**- (i) *ஜம்மிய்யத்துஸ் ஸஹ்வா அல்-கைரிய்யா (ஜஸ்கா) கூட்டிணைத்தல் சட்டமூலம் 2012, ஒற்றோபர் மாதம் 05 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

(ii) *ஹேரண்ட்ஸ் பொ எடியுகேஷன் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2012, ஒற்றோபர் மாதம் 05 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்***. *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்***, *அதாவது 2012, திசெம்பர் மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, திசெம்பர் மாதம் 07 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**பி. கே. எஸ். ரவீந்திர,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 23 ஆந் திகதி.*

# மாகாண சபை அறிவித்தல்கள்

## சப்பிரகமுவ மாகாண மாகாண சபை

*சப்பிரகமுவ மாகாணத்தின் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம்*

**நன்னடத்தை அலுவலர்களை நியமித்தல்**

*1944 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க குற்றவாளிகள் நன்னடத்தை கட்டளைச் சட்டத்தின் 18(3) ஆம் பிரிவின் கீழ் நிரல் I இல் குறிப்பிடப்பட்ட நன்னடத்தை உத்தியோகத்தர்களின் பெயர்களுக்கு எதிரேயுள்ள நிரல் II இல் குறிப்பிடப்பட்ட நீதிமன்றப் பிரிவுகளுக்கு நிரல் III இல் குறிப்பிடப்பட்ட திகதியிலிருந்து நியமிக்கப்பட்டுள்ளனர் என்பதனை இத்தால் அறிவிக்கின்றேன்.*

*திலினி தர்மதாச,*
*நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவை*
*மாகாண ஆணையாளர்,*
*சப்பிரகமுவ மாகாணம்.*

*நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம்,*
*சப்பிரகமுவ மாகாண மாகாண சபை,*
*புதிய நகரம்,*
*இரத்தினபுரி,*
*2012, நவெம்பர் 02.*

**தரம் I இலுள்ள நன்னடத்தை உத்தியோகத்தர்**

| தொடர் இல. | நிரல் I<br>பெயர் | நிரல் II<br>நீதிமன்றப் பிரிவு | நிரல் III<br>திகதி |
|---|---|---|---|
| 01 | திரு. டபிள்யு. ஆர். ஏ. எம். ஏ. சிறிசேன | வறகாபொல | 2012.08.15 |

**தரம் II இலுள்ள நன்னடத்தை உத்தியோகத்தர்**

| தொடர் இல. | நிரல் I<br>பெயர் | நிரல் II<br>நீதிமன்றப் பிரிவு | நிரல் III<br>திகதி |
|---|---|---|---|
| 01 | திருமதி டபிள்யு. ஏ. எம். ஜீ. டீ. ஏகநாயக | ருவன்வெல்ல | 2012.08.06 |
| 02 | செல்வி எம். ஏ. யூ. பிரியதர்ஷனி | கேகாலை | 2012.09.10 |

*11-1074*